முழுப் பதிப்புரிமையுடையது.

SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

மட்டம் III பரீட்சை – 2026 சனவரி

(304) நிறுவனம் மற்றும் தனிநபர் வரியியல்

(Corporate & Personal Taxation)

2026-02-08
பிற்பகல்
[01.45 – 05.00]

பக்கங்கள் : 10
வினாக்கள் : 09

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
  விடையெழுத : 03 மணித்தியாலங்கள்
  (2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  (3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*
  (4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் ஏதேனும் எடுகோள்களை மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  (5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  (6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (7) *100 புள்ளிகள்.*

பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

வினா 01

வரையறுக்கப்பட்ட ராஜேஷ் பாற்பண்ணைக் கம்பனியானது இந்தியாவில் உள்ள மிகப்பெரிய பால் உற்பத்திக் கம்பனிகளில் ஒன்றாகும். **வரையறுக்கப்பட்ட கிரிசுது (தனியார்) கம்பனி** என்பது இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனி ஆகும். இது **வரையறுக்கப்பட்ட ராஜேஷ் பாற்பண்ணைக் கம்பனியி**ன் ஒரு துணைக் கம்பனியாக உள்ளதுடன் உள்நாட்டுச் சந்தைக்கு பால் உற்பத்தி செய்யும் வணிகத்தில் ஈடுபட்டுள்ளது. **வரையறுக்கப்பட்ட கிரிசுது (தனியார்) கம்பனி** ஆனது பால் உற்பத்திக்கான ஒரு தொழினுட்பத் தளத்தை **வரையறுக்கப்பட்ட ராஜேஷ் பாற்பண்ணைக் கம்பனியி**டமிருந்து பெற்றுக் கொள்ளத் திட்டமிடுகிறது. தொழினுட்பத்தைப் பயன்படுத்துவதற்காக **வரையறுக்கப்பட்ட கிரிசுது (தனியார்) கம்பனி** ஆனது **வரையறுக்கப்பட்ட ராஜேஷ் பாற்பண்ணைக் கம்பனி**க்கு காப்புரிமைத் தொகை செலுத்த வேண்டும்.

நீங்கள் செய்ய வேண்டியவை :

(a) இலங்கையில் **வரையறுக்கப்பட்ட கிரிசுது (தனியார்) கம்பனி**யின் வதிவிட அந்தஸ்தை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) இலங்கையில் ஏற்புடைய இரண்டு (02) நேரில் வரிகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

வினா 02

நிசாந்த என்பவர் தொழில்முறை ரீதியான ஒரு மருத்துவர் ஆவார். அவர் தனது குடும்பத்துடன் கனடாவுக்கு குடிபெயரத் திட்டமிடுகிறார். இதனால், **நிசாந்த** வரிமதிப்பாண்டு 2024/25 காலப்பகுதியில் பின்வரும் மூலதனத் தன்மை வாய்ந்த பரிவர்த்தனைகளை மேற்கொண்டுள்ளார்:

(ரூ.)

சொத்து வகை	நிர்மாண/ கொள்வனவுக் கிரயம்	30.09.2017 இல் சந்தைப் பெறுமதி	பெற்ற பிரதிபலன்	தரகருக்கான கட்டணம்
2010 இலிருந்து பயன்படுத்தப்பட்ட வதிவிட இல்லம் (பூர்வீகமானது)	2,000,000	10,000,000	13,500,000	1,350,000
இறப்பர் தோட்டம் (இறப்பரில் இருந்து வருமானம் ஈட்டப்பட்டது)	5,000,000	6,300,000	8,100,000	810,000
மாத்தளையில் உள்ள வெற்றுக் காணி (2014 இல் கொள்வனவு செய்யப்பட்டது)	9,400,000	11,850,000	16,470,000	1,947,000

நீங்கள் செய்ய வேண்டியது :

மேற்படி பரிவர்த்தனைகள் தொடர்பில் **நிசாந்தவினால்** செலுத்தப்பட வேண்டிய மூலதன நய வரியைக் (CGT) **கணிக்குக.**

(குறிப்பு: ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் மூலதன வரியைக் கருத்திற் கொள்வதற்கான அல்லது கருத்திற் கொள்ளாமைக்கான காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.) (05 புள்ளிகள்)

வினா 03

X & Co. என்பது கொழும்பில் உள்ள ஒரு நிர்மாண நிறுவனம் ஆகும். இது **அர்ஜுன்** மற்றும் **பிரியலால்** ஆகியோருக்கிடையிலான ஒரு பங்குடமையாக இயங்குகிறது. அவர்கள் இலாப, நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்து கொள்ள இணங்கியுள்ளனர். **அர்ஜுன்** அவருடைய நண்பரான **சமீரவுடன்** ஓர் உப பங்குடமையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளார். உப பங்குடமை உடன்படிக்கையின் கீழ், **சமீர, X & Co** இலிருந்து **சமீரவுக்குக்** கிடைக்கும் இலாபத்தில் 25% ஐப் பெற உரித்துடையவர். உப பங்குடமையானது **அர்ஜுன்** மற்றும் **சமீரவுக்கு** இடையிலான ஒரு தனியான உடன்படிக்கையைக் கொண்டுள்ளது. இது **பிரியலாலின்** பங்கில் தாக்கத்தை ஏற்படுத்தாது.

நீங்கள் செய்ய வேண்டியது :

"A. A Davoodbhoy Vs CGIR" என்ற வழக்கைத் தொடர்புபடுத்தி, **அர்ஜுன்** மற்றும் **சமீரவுக்கு** இடையிலான இந்த உடன்படிக்கையின் வருமான வரித் தாக்கங்களை (implications) **விபரிக்குக.**

(05 புள்ளிகள்)

வினா 04

(A) **வரையறுக்கப்பட்ட மில்லேனியம் ஹோட்டல்ஸ் (தனியார்) கம்பனி** கொழும்பில் ஒரு சுற்றுலா ஹோட்டலை நடத்துகிறது. 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டில், ஹோட்டலானது பின்வரும் வருமான மூலங்களைப் பெற்றதுடன் சேவைக் கட்டணம், மொத்த வருமானம் மீது கணிப்பிடப்பட்டுள்ளது :

வருமான வகை	ரூ.
அறைகள் மூலம் பெற்ற வருமானம்	1,650,000
உணவு, பானங்கள் மூலம் பெற்ற வருமானம்	2,758,000
ஸ்பா (Spa) மூலம் பெற்ற வருமானம்	876,500
மொத்த வருமானம்	**5,284,500**
சேவைக் கட்டணம்	528,450
	5,812,950

நீங்கள் செய்ய வேண்டியது :

2025 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான சுற்றுலா அபிவிருத்தி வரியை (TDL) **மதிப்பிடுக.**

(03 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியானது ABC பீ.எல்.சீ.** (கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியலிடப்பட்ட விலைகோரப்பட்ட ஒரு கம்பனி) இன் விலைகோரப்பட்ட பங்குகளில் முதலீடு செய்திருந்தது. 2025 மார்ச் 10 இல், **ABC பீ.எல்.சீ.** இன் 10,000 பங்குகளை **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி**, பங்கொன்று ரூ. 35/- விலையில் விற்பனை செய்தது.

நீங்கள் செய்ய வேண்டியது :

வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியால் செலுத்த வேண்டிய பங்குப் பரிவர்த்தனை வரியைக் (share Transaction Levy) **கணிக்குக.**

(02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

பகுதி A முடிவு

பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

வினா 05

வரையறுக்கப்பட்ட DGB (தனியார்) கம்பனி சப்பாத்துகளைத் தயாரித்து விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளது. இது பெறுமதி சேர் வரிக்கு (VAT) பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பனி ஆகும்.

2025 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான பின்வரும் தகவல்கள் வணிகத்தின் கணக்கேடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டு காலப்பகுதியில் **வரையறுக்கப்பட்ட DGB (தனியார்) கம்பனியால்** செய்யப்பட்ட விற்பனைகளின் (VAT உள்ளடக்கப்படாத) விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

	ரூ.
உள்நாட்டு விற்பனைகள்	36,672,000
ஏற்றுமதி விற்பனைகள்	5,254,000

(2) பின்வரும் பிற வருமானங்களும் (VAT உள்ளடக்கப்படாத) காலாண்டின்போது பெறப்பட்டன :

	ரூ.
துணைக் கம்பனியிடமிருந்து பெற்ற வாடகை வருமானம் (VAT இற்கு பதிவு செய்யப்படாத கம்பனி)	225,000
மோட்டார் லொறி ஒன்றின் விற்பனையிலிருந்தான வருமானம்	3,540,000

(3) காலாண்டு காலப்பகுதியில் கம்பனி பின்வரும் உள்ளீட்டு வரிகளைச் செலுத்தியிருந்தது :

	ரூ.
மூலப் பொருள்களின் இறக்குமதி மீது	2,423,000
மூலப் பொருள்களின் உள்நாட்டுக் கொள்வனவுகள் மீது	1,473,000
பணிப்பாளர் பயன்படுத்தும் மோட்டார் காருக்கான பழுதுபார்ப்புகள் மீது	32,000

(4) முன்னைய காலாண்டிலிருந்து முன்கொணரப்பட்ட மிகை உள்ளீட்டு VAT தொகை ரூ. 524,520/-.

(5) மாதாந்த VAT தவணைக் கட்டணங்களாக, கம்பனி ரூ. 1,500,000/- செலுத்தியிருந்தது.

(நியம VAT வீதத்தைப் 18% ஆகக் கருதுக.)

நீங்கள் செய்ய வேண்டியது :

2025 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காகச் செலுத்த வேண்டிய மீதி / (மேலதிகமாச் செலுத்திய) பெறுமதி சேர் வரியை (VAT) **மதிப்பிடுக.** (10 புள்ளிகள்)

வினா 06

"Event Planners" என்பது **ருவான்** மற்றும் **மது** ஆகிய இரு பங்காளர்களால் முன்னெடுக்கப்படுகின்ற ஒரு பங்குடமை வியாபாரம் ஆகும். அவர்கள் இலாப, நட்டங்களை முறையே 3 : 2 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ள இணங்கியுள்ளனர். இந்த வணிகமானது திருமண வைபவங்கள், தானம் வழங்கும் நிகழ்வுகள், நிறுவன நிகழ்ச்சிகள் போன்ற பல்வேறு நிகழ்வுகளுக்கும் உபகரணங்களை வாடகைக்கு வழங்குகிறது.

2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் வருமானக் கூற்றின் பிரித்தெடுப்பு கீழே தரப்பட்டுள்ளது :

	ரூ.
மொத்த இலாபம்	25,200,000
பிற வருமானம் :	
நிலையான வைப்புகள் மீதான வட்டி (மொத்தம்)	250,000
	25,450,000
செலவினங்கள் :	
நிருவாகச் செலவினங்கள்	(5,250,000)
விநியோகச் செலவினங்கள்	(3,100,000)
நிதிச் செலவினங்கள்	(650,000)
பங்குடமையின் நிகர இலாபம்	**16,450,000**

மேற்படி நிகர இலாபத்தைக் கணிக்கும்போது பின்வரும் செலவினங்கள் கழிக்கப்பட்டுள்ளன :

(1) பங்காளர்களுக்கான சம்பளங்கள் :

ருவான் : ரூ. 2,400,000/-

மது : ரூ. 3,600,000/-

(2) **மதுவின்** மகன் பங்குடமையின் ஒரு முகாமையாளராகப் பணி புரிகிறார். அவருக்கு ஆண்டின் காலப் பகுதியில் ரூ. 1,000,000/- செலுத்தப்பட்டது.

(3) **ருவானுக்குச்** சொந்தமான லொறி, உபகரணங்களை விநியோகம் செய்வதற்காகப் பயன்படுத்தப் படுகிறது. இதன் பொருட்டு அவருக்கு மாதமொன்றிற்கு ரூ. 80,000/- வாடகை செலுத்தப்படுகிறது.

(4) வரி மதிப்பாண்டு காலப்பகுதியில் அரசாங்க வைத்தியசாலை ஒன்றிற்கு நன்கொடையாக ரூ. 300,000/- செலுத்தப்பட்டுள்ளது.

(5) ஆண்டின் காலப்பகுதியில், மேம்படுத்தப்பட்ட ஒலி உபகரணம் ஒன்று ரூ. 1,000,000/- கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டது. நிருவாகச் செலவினங்களின் கீழ் தேய்மானமாக ரூ.100,000/- பதிவு செய்யப்பட்டுள்ளது. ஏனைய அனைத்துச் சொத்துக்களும் கணக்கீட்டு நோக்கத்திற்காகவும் வரி நோக்கத்திற்காகவும் 2024 ஏப்ரல் 01 இல் முழுமையாகத் தேய்மானஞ் செய்யப்பட்டுள்ளன.

நீங்கள் செய்ய வேண்டியது :

வரி மதிப்பாண்டு 2024/25 இற்காக பங்குடமை செலுத்த வேண்டிய வருமான வரியை **மதிப்பிடுக.**

(10 புள்ளிகள்)

வினா 07

(A) **Sunny Drinks (Pvt) Ltd.** என்பது இலங்கையில் வதிவுள்ள ஒரு கம்பனி ஆகும். கம்பனி 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிக் கூற்றுக்களை இறுதி செய்யவில்லை. எனவே, வரி மதிப்பாண்டு 2024/25 இற்கான வருமான வரித் திரட்டு உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படவில்லை.

நீங்கள் செய்ய வேண்டியவை :

(a) வரி மதிப்பாண்டு 2024/25 இற்கான வருமான வரித் திரட்டைச் சமர்ப்பிப்பதற்கான உரிய திகதியைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, வருமான வரித் திரட்டை வழங்கத் தவறியமைக்காக விதிக்கப்படக்கூடிய அபராதங்களைக் (penalties) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(B) (a) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 135 இன் கீழ், உதவி ஆணையாளர் ஒரு மூல மதிப்பீட்டைத் (original assessment) திருத்தி, திருத்தப்பட்ட அல்லது மேலதிக மதிப்பீட்டை வழங்குகின்ற பின்வரும் சந்தர்ப்பங்களில் காலக்கெடு (time bar) ஏற்பாடுகளைக் **குறிப்பிடுக.**

(i) ஒரு வரி செலுத்துநர் சுய மதிப்பீட்டுத் திரட்டினைத் தாக்கல் செய்துள்ளார்.

(ii) ஒரு வரி செலுத்துநர் மோசடியாக அல்லது மொத்தமாக அல்லது வேண்டுமென்றே புறக்கணிக்கும் (fraud or gross or willful neglect) சந்தர்ப்பங்களில், (03 புள்ளிகள்)

(b) முன்கூட்டிய மதிப்பீடு ஒன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய இரண்டு (02) விடயங்களைக் (matters) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

பகுதி B முடிவு

பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

வினா 08

Crystal Beverages (Pvt) Ltd. என்பது இலங்கையில் உள்ள ஒரு வதிவிடக் கம்பனி ஆகும். இது போத்தலில் அடைக்கப்பட்ட பழச்சாறுப் பானங்களைத் தயாரித்து விற்பனை செய்யும் வணிகத்தில் ஈடுபட்டுள்ளது.

பின்வரும் தகவல்கள் 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **Crystal Beverages (Pvt) Ltd.** இன் நிதிக் கூற்றுக்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **Crystal Beverages (Pvt) Ltd**. இன் பொழிப்பாக்கப்பட்ட வருமானக் கூற்று பின்வருமாறு :

	ரூ.
புரள்வு (turnover)	325,110,000
விற்பனைக் கிரயம்	(260,088,000)
மொத்த இலாபம்	**65,022,000**
பிற வருமானம்	25,890,000
விநியோகச் செலவினங்கள்	(22,842,000)
நிருவாகச் செலவினங்கள்	(35,470,000)
வரிக்கு முன்னரான நிகர இலாபம்	**32,600,000**

(2) பிற வருமானம் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது :

	ரூ.
நிலையான வைப்புகள் மீதான வட்டி வருமானம் (மொத்தம்)	8,950,000
களஞ்சியம் மீதான வாடகை வருமானம் (மொத்தம்)	16,940,000

(3) நிருவாகச் செலவினங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன :

- ஆண்டிற்கான தேய்மானக் கட்டணம் ரூ. 8,870,000/-.
- ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூ. 2,500,000/-.
- களியாட்டச் செலவினங்கள் ரூ. 750,000/- ஆக இருந்தது. இது சேவை நாடுநர் ஒருவரின் திருமண வரவேற்புக்காகச் செலுத்தப்பட்ட ரூ. 300,000/- ஐயும் கம்பனியின் வருடாந்த ஊழியர் சுற்றுலாவுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட உல்லாச விடுதிக்குச் செலுத்தப்பட்ட ரூ. 450,000/- ஐயும் உள்ளடக்குகிறது.
- புதிய உற்பத்திப் பொறி ஒன்றை ஆய்வு செய்வதற்காக வெளிநாட்டிற்குப் பயணமான முகாமைத்துவப் பணிப்பாளர் தொடர்பில் ரூ. 800,000/- செலவிடப்பட்டது.
- மோட்டார் லொறி ஒன்றின் விற்பனையால் ஏற்பட்ட கணக்கீட்டு நட்டம் ரூ. 150,000/-.
- சட்ட மற்றும் தொழில்முறைக் கட்டணங்களின் தொகை ரூ. 650,000/- ஆகும். இதில் ரூ. 200,000/- ஆனது ஒரு புதிய பண்டக்குறியைப் (trademark) பதிவு செய்வதுடன் தொடர்புடைய தொகையாக இருப்பதுடன் மீதித் தொகையானது வழக்கமான கணக்காய்வு மற்றும் சட்ட ஆலோசனை சேவைகளுக்காகக் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

(4) விநியோகச் செலவினங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது :

- வணிகத்திற்குக் கடன்பட்டிருந்த ஒரு வாடிக்கையாளர் வங்குரோத்து அடைந்தவராக (bankrupt) அறிவிக்கப்பட்டதால், அந்தத் தொகை ரூ. 150,000/- அறவிட முடியாக் கடனாக வருமானக் கூற்றில் நேரடியாகப் பதிவழிப்புச் செய்யப்பட்டது. மேலும், வருமானக் கூற்றிற்கு ரூ. 95,000/- பொது ஏற்பாடு செய்யப்பட்டது.
- உரிய நேரத்தில் வருமான வரி செலுத்தாததன் காரணமாக, தண்டப்பணமும் அபராதமும் ரூ. 120,000/- தாக்கல் செய்யப்பட்டது.
- கம்பனி ரூ. 500,000/- பெறுமதியான போத்தலில் அடைக்கப்பட்ட பழச்சாறுப் பானங்களை "பிரதேச சபைக்கு" நன்கொடையாக வழங்கியது.

(5) 2025 மார்ச் 31 இல் ஆதனம், பொறி மற்றும் உபகரண விபரங்கள் பின்வருமாறு :

சொத்து (கிரயத்தில்)	01.04.2024 இல் மீதி (ரூ.)	சேர்ப்பனவுகள் (ரூ.)	அகற்றல் (ரூ.)	31.03.2025 இல் மீதி (ரூ.)
காணி	4,500,000	-	-	4,500,000
கட்டடங்கள்	15,000,000	1,500,000	-	16,500,000
பொறியும் இயந்திரமும்	7,000,000	4,500,000	-	11,500,000
தளபாடமும் பொருத்துக்களும்	2,800,000	-	-	2,800,000
மோட்டார் வாகனங்கள்	18,600,000	-	3,200,000	15,400,000,
மொத்தம்	**47,900,000**	**6,000,000**	**3,200,000**	**50,700,000**

- ரூ. 3,200,000/- கிரயத்தில் வரி மதிப்பாண்டு 2022/23 இல் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் லொறி 2024 டிசெம்பரில் ரூ. 2,850,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. இந்த லொறி பொருள்களின் விநியோகத்திற்காகப் பயன்படுத்தப்பட்டதாகும்.
- ஆண்டின் காலப்பகுதியில் கம்பனி ரூ. 4,500,000/- இற்கு ஒரு புதிய இயந்திரத்தைக் கொள்வனவு செய்தது.
- ரூ. 6,000,000/- பெறுமதியான முகாமைப் பணிப்பாளரின் காரைத் தவிர, ஏனைய அனைத்து மோட்டார் வாகனங்களும் விநியோக வாகனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.
- 2024 ஏப்ரல் 01 இலான நிலவரப்படி, எந்தச் சொத்துக்களும் வரி நோக்கத்திற்காக முழுமையாகத் தேய்மானஞ் செய்யப்படவில்லை.

(6) ஆண்டின் காலப்பகுதியில் ஓய்வு பெற்ற ஊழியர் ஒருவருக்கு பணிக்கொடையாக ரூ. 900,000/- செலுத்தப்பட்டது.

(7) வரி மதிப்பாண்டு 2024/25 இற்கு முன்கொணரப்பட்ட சீராக்கப்பட்ட வரி இழப்பு (tax loss) ரூ.650,000/- ஆக இருந்தது.

(8) வங்கியானது வட்டி வருமானத்தில் 5% முற்பண வருமான வரியை (AIT) / நிறுத்தி வைத்தல் வரியைக் (WHT) கழித்துள்ளது.

(9) கம்பனியானது வரி மதிப்பாண்டு 2024/25 இற்காக சுய மதிப்பீட்டு அடிப்படையில் வருமான வரியின் காலாண்டுத் தவணைக் கட்டணங்களாக ரூ. 6,500,000/- செலுத்தியிருந்தது.

(10) கம்பனியானது வாடகைக் குடியிருப்பாளரிடமிருந்து வாடகை வருமானம் மீதான நிறுத்தி வைத்தல் வரிச் (WHT) சான்றிதழ்களைப் பெற்றிருந்தது.

நீங்கள் செய்ய வேண்டியவை :

வரி மதிப்பாண்டு 2024/25 இற்காக **Crystal Beverages (Pvt) Ltd.** இன் பின்வருவனவற்றை **மதிப்பிடுக:**

(a) வரி மதிக்கத்தக்க வருமானம்

(b) வரிவிதி வருமானம்

(c) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(d) செலுத்த வேண்டிய மீதி / (மேலதிகமாகச் செலுத்திய) வருமான வரி.

(குறிப்பு : ஏதாவது செலவினங்களை அனுமதிப்பதற்கு அல்லது அனுமதியாது விடுவதற்கான காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.) (25 மொத்தம்)

வினா 09

மேவன், என்பவர் ஒரு வதிவுடைய தனியாள் ஆவார். அவர் தற்போது இலங்கையில் உள்ள ஓர் ஆடைக் கம்பனியில் சிரேஷ்ட முகாமையாளராகப் பணி புரிகிறார்.

மேவன் தொடர்பான பின்வரும் தகவல்கள், வரி மதிப்பாண்டு 2024/25 (இதன் பின்னர் “ஆண்டு’ என அழைக்கப்படும்) தொடர்பில் தரப்பட்டுள்ளன :

(1) **ஊழியத்திலிருந்தான வருமானம் :**

- மொத்தச் சம்பளம் - மாதமொன்றுக்கு ரூ. 560,000/-.
- கம்பனி அவருக்கு எரிபொருளுடன்கூடிய மோட்டார் கார் ஒன்றை (2,000cc) வழங்கியுள்ளது.
- ஆண்டின் காலப்பகுதியில், அவருக்கு ஒரு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கான மொத்த வைத்தியசாலைக் கட்டணம் ரூ. 480,000/- இனையும் கம்பனி ஏற்றுக் கொண்டிருந்தது. மருத்துவ நன்மைகள் கம்பனியின் அனைத்து ஊழியர்களுக்கும் சம விதிமுறைகளின் கீழ் கிடைக்கின்றன.
- அவர் தனது குடும்பத்தினருடன் வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்தார். அவர்களுக்கான தங்குமிடம் மற்றும் விமானப் பயணச் சீட்டுக் கிரயம் ரூ. 960,000/- இனையும் கம்பனி ஏற்றுக் கொண்டது.
- **மேவன்** கம்பனியால் வழங்கப்பட்ட ஒரு தொடர்மாடிக் குடியிருப்பில் வசிக்கிறார். இதற்கு கம்பனி மாதாந்த வாடகையாக ரூ. 90,000/- செலுத்துகிறது. கம்பனியால் வழங்கப்பட்ட தொடர்மாடிக் குடியிருப்பு தொடர்பில் அவரது சம்பளத்திலிருந்து மாதாந்த அடிப்படையில், மாதாந்த வாடகையின் 50% இற்குச் சமனான தொகை கழிக்கப்படுகிறது.
- ஆண்டிற்காகக் கழிக்கப்பட்ட முற்பண தனிநபர் வருமான வரி (APIT) ரூ. 2,250,000/- ஆகும்.

(2) **மேவன்** நிறுவன சேவை நாடுநர்களுக்கு தற்காலிக அடிப்படையில் வணிக முகாமைத்துவ ஆலோசனைச் சேவைகளை வழங்குகிறார். 2024/25 வரி மதிப்பாண்டிற்கான ஆலோசனை சேவைகள் தொடர்பான வருமான மற்றும் செலவின விபரங்கள் பின்வருமாறு :

	ரூ.
ஆலோசனை சேவைகள் மீதான வருமானம்	5,840,000
கழி : செலவினங்கள்	
அச்சிடலும் காகிதாதியும்	630,000
அலுவலக வாடகை	1,000,000
மின்சாரம் மற்றும் தொலைபேசிக் கட்டணங்கள்	280,000
வங்கிக் கடன் வட்டி	230,000
நிகர இலாபம்	**3,700,000**

வங்கிக் கடன் வட்டியானது அவரது மகனுக்கு வீடு ஒன்றை நிர்மாணிப்பதற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட கடனொன்றின் மீது செலுத்தப்பட்டுள்ளது.

(3) அவருக்கு மாத்தளையில் பூர்வீக வீடு ஒன்று உள்ளது. அதனை அவர் அருகிலுள்ள ஒருவருக்கு மாதாந்த வாடகை ரூ. 75,000/- இற்கு வாடகைக்கு விட்டுள்ளார். இவ்வீட்டின் சோலைவரி மதிப்பீடு ரூ. 150,000/- ஆகும். சோலைவரியானது வாடகைக் குடியிருப்பாளரால் 30% இல் செலுத்தப்பட்டுள்ளது.

(4) ஆண்டின் காலப்பகுதியில், **மேவன்** பின்வரும் வட்டி வருமானத்தைப் பெற்றுள்ளார் :

(ரூ.)

விபரம்	பெற்ற திகதி (முதிர்வுத் திகதி)	தொகை (மொத்தம்)	கழிக்கப்பட்ட AIT/WHT
நிலையான வைப்பு மீதான வட்டி	15.12.2024	800,000	40,000
திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி	30.01.2025	1,000,000	-

(5) ஆண்டின் காலப்பகுதியில், **மேவன்** அவரது முதலீடுகளில் இருந்து பின்வரும் வருமானத்தைப் பெற்றுள்ளார் :

- **மேவன்,** விலைகோரப்பட்ட பொதுக் கம்பனிகளில் உள்ள பங்குகளின் விற்பனை மூலம் 2024 செப்ரெம்பரில் ரூ. 195,000/- இலாபத்தைச் சம்பாதித்துள்ளார்.
- 2025 மார்ச் இல் விலைகோரப்பட்ட பொதுக் கம்பனிகளில் இருந்து பெற்ற பங்கிலாப வருமானம் (பெற்ற பங்கிலாபத்திலிருந்து செலுத்தப்பட்டது) ரூ. 240,000/- ஆக இருந்தது.

(6) 2024 ஏப்ரலில், அவர் *"இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகத்திற்கு"* ரூ.400,000/- பெறுமதியான புத்தகங்களை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

(7) **மேவன்** வரி மதிப்பாண்டு 2024/25 இற்கான வருமான வரியின் காலாண்டுத் தவணைக் கொடுப்பனவுகளாக ரூ. 900,000/- ஐச் செலுத்தியுள்ளார்.

நீங்கள் செய்ய வேண்டியவை :

வரி மதிப்பாண்டு 2024/25 இற்கு **மேவனுக்காக** பின்வருவனவற்றை **மதிப்பிடுக** :

(a) வரிவிதி வருமானம்

(b) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(c) செலுத்த வேண்டிய மீதி / (மேலதிகமாகச் செலுத்திய) வருமான வரி

(d) வரிவிலக்கு வருமானம், ஏதாவது இருப்பின்.

(குறிப்பு : ஏதாவது வருமானம் வரி விதிக்கத்தக்கது அல்ல எனின், அதனைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.)

(25 மொத்தம்)

பகுதி C முடிவு

செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
அறிவு (1)	விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல்	**வரைக (Draw)**	வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல்
		தொடர்புபடுத்துக (Relate)	தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல்
		கூறுக/ குறிப்பிடுக(State)	திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல்
		அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)	கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல்
		நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)	தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
முற்றடக்கம் (2)	யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும்	**ஏற்பிசைவு செய்க (Recognize)**	அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல்
		பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)	விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல்
		விளக்குக (Describe)	பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும்
		விபரிக்குக (Explain)	உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல்
		பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)	சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
பிரயோகம் (3)	புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும்	**கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)**	வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல்
		வரைக (Graph)	வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல்
		மதிப்பிடுக (Assess)	பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல்
		தீர்க்குக (Solve)	கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல்
		தயாரிக்குக (Prepare)	குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல்
		எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)	உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல்
		கணிக்குக / கணிப்பிடுக (Calculate)	கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல்
		பிரயோகிக்குக (Apply)	நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
பகுப்பாய்வு (4)	யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும்	**தொடர்பாடுக(Communicate)**	தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல்
		சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)	முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல்
		வேறுபடுத்துக (Contrast)	வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல்
		ஒப்பிடுக (Compare)	ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல்
		கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)	விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல்
		வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)	சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல்
		பகுப்பாய்வு செய்க (Analyze)	தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல்